[திரு. எஸ். ராமலிங்கம்] [1968 மார்ச் 15

இரண்டும் சேர்ந்து, இரண்டு பொறுப்பும் சேர்ந்து ஒருவர் கையில் இருந்தால், அந்த சமுதாயத்தினர் கையில் இருந்தால், இந்தப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும். சிக்கல், காலதாமதம் இவைகளை எளிதில் தவிர்க்க முடியும். ஆகவே, தான் இந்த இரண்டு பொறுப்பையும் ஒன்றாகச் சேர்த்து ஒருவரிடம் கொடுத்திருந்தார்கள் முன்னாள் ஆட்சியில். இப்பொழுது இருக்கிற போக்கைப் பார்த்தால், அவர்கள் சொல்லிய அளவுக்கு, பிரசங்கம் செய்த அளவுக்கு அரசாங்கம் இதில் கவனம் செலுத்தவில்லையோ, பாராமுகமாக இருக்கிறார்களோ என்று சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது. இதெல்லாம் ஒரு தேசீயப் பிரச்னை, பொதுப் பிரச்னை என்ற முறையில் சொல்கிறேன். இதையெல்லாம் இந்த அரசு மனதில் வைத்து, இது ஒரு ஆழ்ந்த பிரச்னை என்று கருதி, அதைத் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். இந்தப் பிரச்னையையெல்லாம் புரையோடிய புண்ணை தீர்ப்பதுபோல் தீர்க்கவேண்டும். புரையோடிய புண்ணை ஆற்றுவதற்கு பாடுபடவேண்டும். யாருக்கு புண் இருக்கிறதோ அவனே கூட அதை ஆற்றுவதற்கு அச்சப்படலாம். பக்கத்தில் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் கூட அவன் கஷ்டப்படுவானே என்று கூட கண்ணை மூடிக்கொள்ளலாம். ஆகவே, அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று சொன்னால் யாராவது எதிர்ப்பு தெரிவிக்கலாம். புரையோடிய புண் இருந்தால், அவர் மனம் நோகுமோ, இவர் மனம் நோகுமோ என்று பார்த்துக்கொண்டிருக்க முடியாது, புண்ணை உடனே ஆற்ற வேண்டும். ஆகவே, எதிர்ப்பைக் கருதாமல் அவற்றையெல்லாம் சமாளித்து பிரச்னையைத் தீர்க்க முன்வரவேண்டும். இந்த வீட்டு மனைப் பிரச்னையையாவது முதலில் தீர்த்துவைக்கவேண்டும். உண்மையான புண்ணை ஆற்றி புனுகு தடவியாகவேண்டும் என்று சொல்லி, எனக்குப் பேச அவகாசம் தந்த சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்தி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(iv) கண்டெடுக்கப்பட்ட நூறு ரூபாய் நோட்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. இந்த மன்றத்திலே நேற்று ஒரு நூறு ரூபாய் நோட்டு கிடைத்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்கினிராஜ் அவர்கள் செயலாளரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அந்த நோட்டிற்குடையவர் சான்றுகளைக் கூறி செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கிறேன்.

6. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் பேரில் பேசுவதற்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றார்கள். ஆனால் நான் இருக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டியிருப்பதால், அப்படி அதிகமாகக் கொடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 25 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 6 நிமிஷத்திற்கு மேல் கிடைக்காது. ஆகவே, அந்த வரையறைக்குள் பேசுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது திரு. பி. துரைராஜ் அவர்கள் பேசுவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தயவு செய்து மாலை நேரத்தில் சபையை வைத்துக் கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். அரிசன மானியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது இவ்வளவு குறைவாக, 5, 6 நிமிஷம் என்றால்